# சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர் தொழிநுட்ப பிரிவு – 03 ஆம் சேவை வகையின் மின் மருத்துவ தொழிநுட்பவியலாளர் பதவியின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் முகாமைத்துவ உதவியாளர் தொழிநுட்ப பிரிவு – 03 ஆம் சேவை வகையின் மின் மருத்துவ தொழிநுட்பவியலாளர் பதவியில் காணப்படும் 64 வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. தேவையான தகைமைகள்.

2.1. கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் தகைமைகள்.

| கல்வித் தகைமைகள் | தொழில்சார் தகைமைகள் |
|---|---|
| சிங்களம்/ தமிழ் /ஆங்கில மொழி, கணிதம் மற்றும் இன்னும் இரண்டு பாடங்களுக்கு திறமைச் சித்திகள் சகிதம் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்<br>அல்லது<br>தேசிய தொழில்சார் தகைமைகள் (NVQ) 03 இனை பெற்றிருத்தல் | 01. தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் கீழ் கொள்ளப்படுகின்ற அல்லது அத் திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்பட்டுள்ள நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழில்சார் தகைமைகள் (NVQ) 05 ஆம் மட்டம் உள்ளடங்கும் கீழ்வரும் பாடநெறிகளில் ஒன்றைப் பூரணப்படுத்தியிருத்தல்.<br>i. 03 வருட பகுதி நேர தேசிய தொழிநுட்பவியல் சான்றிதழ் (மின் மற்றும் மின்னணுவியல் பொறியியல்) National Certificate in Technology (Electrical & Electronic Engineering)<br>ii. 02 வருட முழு நேர கைத்தொழில் தொழினுட்பவியல் பற்றிய தேசிய சான்றிதழ் (மின் மற்றும் மின்னணுவியல் பொறியியல்) National Certificate in Industrial Technology (Electrical & Electronic Engineering)<br>iii. 02 வருட முழு நேர தேசிய டிப்ளோமா சான்றிதழ் (மின் தொழினுட்பவியல்) National Diploma in Electrical Technology<br>iv. 02 வருட முழு நேர தேசிய டிப்ளோமா சான்றிதழ் (மின் தொழினுட்பவியல்) Naional Certificate in Electrical Technology<br>அல்லது<br>02. மொறட்டுவையில் அமைந்துள்ள கைத்தொழில் பொறியியல் பயிற்சி நிறுவனத்தினால் (Industrial Engineering Training Institute) வழங்கப்படும் தேசிய தொழில்சார் தகைமைகள் (NVQ) 05 ஆம் மட்டம் உள்ளடங்கும் கீழ்வரும் பாடநெறிகளில் ஒன்றை பூரணப்படுத்தியிருத்தல்.<br>i. மின்னணுவியல் தொழிநுட்பவியலாளர் பாடநெறி (Electronics Craftsman)<br>ii. மின் தொழிநுட்பவியலாளர் பாடநெறி (Electrician)<br>அல்லது |

| | |
|---|---|
| | 03. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கீழ் கொள்ளப்படும் நிறுவனமொன்றினால் அல்லது அந் நிறுவனத்தினால் பரிந்துரைக்கப்படும் நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழில்சார் தகைமைகள் (NVQ) 05 ஆம் மட்டம் உள்ளடங்கும் கீழ்வரும் பாடநெறிகளில் ஒன்றை பூரணப்படுத்தியிருத்தல்.<br><br>i. மின் தொழினுட்பவியல் பற்றிய தேசிய டிப்ளோமா - National Diploma in Electrical Technology (Full Time)<br><br>ii. மின் தொழினுட்பவியல் டிப்ளோமா Diploma in Electrical Technology<br><br>iii. 03 வருட மின் தொழினுட்பவியல் டிப்ளோமா Diploma in Electrical Technology (03 Years Part Time)<br><br>iv. மின் தொழினுட்பவியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா - Higher National Diploma in Electrical Technology<br><br>v. மின் தொழினுட்பவியல் பற்றிய தேசிய சான்றிதழ் - National Certificate in Electrical Technology (NCIT – Electrical)<br><br>vi. 03 வருட பகுதி நேர மின் தொழிநுட்பவியல் பற்றிய தேசிய டிப்ளோமா National Diploma in Electrical Technology (03 Years - Part Time)<br><br>அல்லது<br><br>04. தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அல்லது அதன் கீழ் உள்ள நிறுவனமொன்றினால் வழங்கப்படும் உயிரியல் மருத்துவ உபகரண தொழிநுட்பவியல் (Bio Medical Equipment Technology) 06 ஆம் மட்ட தகைமையினை பெற்றிருத்தல்<br><br>அல்லது<br><br>05. அரசினால் வழங்கப்படும் மின்னியல்/ மின்சாரவியல் தொடர்பான தேசிய தொழிநுட்பவியல் பாடநெறியொன்றினைப் பயின்று 17-11-2015 ஆந் திகதி கொண்ட பொது நிர்வாகச் சுற்றுநிருப இலக்கம் 22/2015 இன் படி 30-10-1990 ஆந் திகதி கொண்ட பொது நிர்வாகச் சுற்றுநிருப இலக்கம் 46/90 VI இன் தகைமைகளை பூரணப்படுத்தியிருத்தல். |

2.2. அனுபவம்: மின் மருத்துவ தொழிநுட்பவியலாளர் பதவியுடன் தொடர்புறும் வண்ணம் அரச அல்லது ஏற்றுக் கொள்ளக் கூடிய ஏதேனுமோர் தனியார் துறை நிறுவனமொன்றில் குறித்த துறையில் பெற்றுள்ள அனுபவம் மேலதிக தகைமையாக கருத்திற் கொள்ளப்படும்.

2.3. உடலியல் தகைமைகள்:- அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தவோரு பிரதேசத்திலும் சேவையாற்றவும், பதவியின் கடமைகளை நிறைவேற்றவும் போதியளவு உடலியல் மற்றும் உளவியல் ஆரோக்கியம் கொண்டவராயிருத்தல் வேண்டும்.

2.4. ஏனையவை:-

I. இலங்கைப் பிரசையாதல் வேண்டும்.
II. விண்ணப்பதாரர் சிறந்த ஒழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.
III. பதவியில் ஆட்சேர்ப்பதற்குத் தேவையான 2.1 முதல் 2.5 வரையிலான அனைத்து தகைமைகளையும் 12.10-2026 ஆந் திகதியாகுகையில் அனைத்து விதங்களிலும் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

2.5 வயது:

I. குறைந்த வயதெல்லை : 18 வருடங்களுக்கு குறையாத
II. உச்ச வயதெல்லை : 35 வருடங்களுக்கு மேற்படாத

03. ஆட் சேர்க்கும் முறை:

| வினாப்பத்திரம் | பாடத்திட்டம் | காலம் | மொத்த புள்ளிகள் | தேர்ச்சி புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1. எழுத்துப் பரீட்சை<br>I. நுண்ணறிவு மற்றும் பொது அறிவு | பாடத்திட்டம் கீழ் காட்டப் பட்டுள்ளது | 01 மணித்தியாலம் | 100 | 50% |
| II. விடயம் சார் பொது அறிவு | | 01 மணித்தியாலம் | 100 | 50% |
| 2. தொழில்சார் செயல்முறைப் பரீட்சை | | 02 மணித்தியாலம் | 100 | 50% |

| வினாப்பத்திரம் | பாடத்திட்டம் |
|---|---|
| நுண்ணறிவு மற்றும் பொது அறிவு | விண்ணப்பதாரியின் தர்க்க ரீதியிலான சிந்தனை, அவரது பகுப்பாய்வு சிந்தனைத் திறன் மற்றும் தீர்மானிக்கும் ஆற்றல்கள் என்பவற்றை மதிப்பிடுவதற்கான வினாக்களை கொண்டதாகும். |
| விடயம் சார் பொது அறிவு | மின்னோட்டவியல் - நேரோட்ட மின்னோட்டவியல், ஓமின் விதி, கிர்ச்சாபின் விதி, மின்னழுத்த வேறுபாடு, மின்னோட்டத்தை அளவிடும் முறைகள்.<br>காந்தவியல் - மின் காந்தவியல்<br>நிலை மின்னியல் - கூலோமின் விதி<br>அலைகள் - மின்காந்த அலைகள்<br>மின்னணுப் பௌதிகவியல் - அரைகடத்தி இருமுனையங்கள் மற்றும் திரான்சிஸ்டர்கள்<br>வெப்பம் - விரிவடைதல், நீள் விரிவுக் குணகம்<br>கணிதம் - திரிகோணமிதி சார்புகள்<br>நியூட்டனின் பௌதிகவியல்<br>மின் இயந்திரங்கள் - (D.C மோட்டார், A.C மோட்டார், மின் மாற்றிகள்) |

| | |
|---|---|
| தொழில்சார் செயல்முறைப் பரீட்சை | துறையுடன் தொடர்புறும் அடிப்படை அறிவு, உபகரணங்களை பொருத்துதல், பழுதுபார்த்தல் பற்றிய அறிவு, குறித்த துறையின் உபகரணங்களது பழுதுகளை இனங்காணுதல், துறையுடன் தொடர்புறும் உபகரணங்களை உபயோகித்தல் பற்றிய அறிவு, ஒரு அவத்தை மோட்டார்கள், மூவவத்தை மோட்டார்கள், நேரோட்ட மோட்டார்கள், மூவவத்தை வெப்பமூட்டும் சுருள்கள், அலைநோக்கியின் பயன்பாடு, ஸ்டார்-டெல்டா சுற்றுகள், மின் வழங்கிச் சுற்றுகள் தொடர்பான அறிவினைப் பரிசோதித்தல் |

04. மாதாந்த சம்பளக் கட்டமைப்பு மற்றும் சம்பளப் பரிமாணம்:

ரூபாய் 50,090-10x540-10x630-11x1,010-10x1,190 -ரූ. 84,420

MT-1 (பொது நிர்வாக சுற்றுநிருப இலக்கம் 10/2025 உப அட்டவணை (II) இன் படி)

05. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்

(i) ஆட்சேர்க்கப்படும் உத்தியோகத்தர்கள் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்ற உடன்படுதல் வேண்டும்.

(ii) நியமிக்கப்படும் பதவி நிரந்தரமானது. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு உரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசினால் எதிர்காலங்களில் மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியிலான தீர்மானங்களுக்கு தாங்கள் கீழ்படிதல் வேண்டும். மேலும், தாங்கள் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு / தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசினால் அவ்வப்போது விதிக்கப்படும் வண்ணம் அதற்கான பங்களிப்புத் தொகைகளை செழுத்துதல் வேண்டும்.

(iii) இந் நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவதுடன், ஆட்சேர்க்கப்பட்டு மூன்று (03) வருடங்களினுள் முதலாம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தி அடைதல் வேண்டும்.

(iv) பொது நிர்வாக சுற்றுநிருப இலக்கம் 18/2020 இன் படி மற்றும் அதனுடன் தொடர்புறும் சுற்றுநிருபங்களின் படி பதவியில் நியமனம் பெற்று 05 வருடங்களினுள் உரிய அரச மொழி பற்றிய தேர்ச்சியினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

(v) பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறைவிதிகளுக்கும், இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவைக்கும், அரச நிதிப் பிரமாணங்களுக்கும், அரசினால் வெளியிடப்படும் சுற்றுநிருப விதிமுறைகளுக்கும், சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர் தொழிநுட்ப பிரிவு – 03 ஆம் சேவை வகையின் மின் மருத்துவ தொழிநுட்பவியலாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கும், சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளரினால் அவ்வப்போது வெளியிடப்படும் சுற்றுநிருபங்கள் மற்றும் பொது விதிமுறைகளுக்கும் இந்த நியமனம் உட்படுகின்றது.

(vi) தங்களால் விண்ணப்பத்தில் குறிப்பிடப்படுகின்ற மொழிமூலமே, தாங்கள் நியமனம் பெறத் தகுதி பெறுகின்ற மொழிமூலம் ஆகும்.

06. **விண்ணப்பிக் வேண்டிய முறை**

(அ) விண்ணப்பதாரிகள் இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பத்தின் படி விண்ணப்பங்களைத் தயாரித்து, விண்ணப்பங்களை இடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **“சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர் தொழிநுட்ப பிரிவு – 03 ஆம் சேவை வகையின் மின் மருத்துவ தொழிநுட்பவியலாளர் பதவிக்கு ஆட்சேர்த்தல் (திறந்த) – 2026”** எனக் குறிப்பிட்டு 2026-10-12 ஆந் திகதிக்கு முன்னர் செயலாளர், சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு, நிர்வாகம் 07 ஆம் கிளை, இலக்கம் 106, டட்லி சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு 08 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி: 2026-10-12......

(இ) பரீட்சைக் கட்டணம் ரூ. 1,000.00 ஆகும். **இலங்கை வங்கியின் தப்பிரபேன் கிளையில் “சுகாதார செயலாளர்” பெயரில் உள்ள கணக்கிலக்கம் 7041318** இற்கு வரவு வைக்கப்படும் வண்ணம் இத் தொகையினை இலங்கை வங்கியின் ஏதேனுமோர் கிளைக்குச் செழுத்திப் பெற்றுக் கொள்ளப்படும் பற்றுச்சீட்டினை மாதிரி விண்ணப்பப்படிவத்தில் காட்டப்பட்டுள்ள கூண்டினுள் கழறாத வண்ணம் ஒட்டுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணம் எந்தவொரு காரணத்திற்காகவும் மீளளிக்கப்படல் மற்றும் வேறோர் பரீட்சை அல்லது விடயத்திற்காக செல்லுபடியாகும் என கருதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட மாட்டாது. மேலும், விண்ணப்பத்தின் மற்றும் பணம் செழுத்திய பற்றுச்சீட்டின் பிரதியொன்றினை தம்மிடத்தே வைத்திருத்தல் தகுந்ததாகும். (காசுக் கட்டளைகள் மற்றும் முத்திரைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது).

(ஈ) விண்ணப்பத்தினை தயார் செய்யும் போது அதன் தலைப்பில் குறிப்பிடப்படும் பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

(உ) விண்ணப்பத்தினை அனுப்பியதன் பின்னர் அது தொடர்பில் ஏற்படுகின்ற எந்தவித மாற்றங்கள் பற்றியும் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.

07. பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்

பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் அனைத்துப் பாடங்களின் போதும் மண்டப பொறுப்பாளர் திருப்தியடையும் வண்ணம் தமது சுய ஆளடையாளத்தினை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு கீழ் காட்டப்படும் எந்தவொரு ஆவணமும் ஏற்றுக் கொள்ளப்படும்.

I. தேசிய அடையாள அட்டை
II. செல்லுபடியான வெளிநாட்டுக் கடவுச் சீட்டு
III. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

அவ்வாறே பரீட்சை மண்டபத்தினுள் நுழையும் போது பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொள்ள இயலும் வண்ணம் முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மூடாது பரீட்சை மண்டபத்தினுள் நுழைதல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்த மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்தில் நுழைந்ததில் இருந்து பரீட்சை முடிந்து மண்டபத்திலிருந்து வெளியேறும் வரையில் பரீட்சை உத்தியோகத்தர்களுக்கு பரீட்சார்த்தியை இனங்கான இயலும் வண்ணம் முகம் மற்றும் இரு காதுகளையும் மூடாது இருத்தல் வேண்டும். அதற்கு மேலதிகமாக பரீட்சை தொடர்பில் தேவைப்படக் கூடிய பிற அறிவுறுத்தல்கள் ஏதுமிருப்பின் அது பற்றி பரீட்சை அனுமதி அட்டை மூலம் தங்களுக்கு அறியத் தரப்படும். பரீட்சை தொடர்பிலான இந்த விதிகளுக்கு மாற்றமாக செயற்படும் பரீட்சார்த்திகளை பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்காதிருக்கும் / பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேற்றும் அதிகாரம் மண்டப பொறுப்பாளரைச் சாரும்.

**08. கையொப்பத்தினை உறுதிப்படுத்துதல்:**

அரச பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்திய ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, ஆணை பெற்ற முப்படை உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானிப்படுத்தப்பட்ட பதவியொன்றினை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது இலங்கை நிர்வாக சேவையின் / கல்வி நிர்வாக சேவையின் / அரச கணக்காளர் சேவையின் ரூ. 854,880.00 இலும் கூடிய திரட்டிய வருடாந்த அடிப்படை சம்பளமொன்றினைப் பெறும் நிரந்தர அரச பதவியொன்றினை வகிக்கும் பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பதாரியின் ஒப்பம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

**09. போலியான தகவல்களை வழங்குதல்.**

விண்ணப்பத்தினை நிரப்புகையில் மிகக் கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இந்த பரீட்சையின் சட்ட திட்டங்களின் படி விண்ணப்பதாரி ஒருவர் வழங்கியுள்ள ஏதேனுமோர் தகவல் பொய்யானது அல்லது தவறானது என ஆட்சேர்ப்பதற்கு முன்னர் நிரூபணமாயின் அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். அவ்வாறான பொய்யான அல்லது தவறான தகவல் ஆட்சேர்க்கப்பட்டதன் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நிரூபணமாயின், அதற்கு ஏற்புடைய சட்டரீதியான செயல்முறைகளின் கீழ் சேவையிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**10. பரீட்சை நிபந்தனைகள்:-**

i. பதவியில் ஆட்சேர்ப்பதற்குத் தேவையான அனைத்து தகைமைகளையும் 2026-.10.:12. ஆந் திகதியாகுகையில் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும். உரிய தகைமைகளை பூரணப்படுத்தியிராத விண்ணப்பதாரிகள் பரீட்சையில் போதியளவு புள்ளிகளைப் பெற்றிருப்பினும் நியமனம் பெறத் தகுதியற்றவர்கள் ஆவர்.
ii. இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பபடிவத்தின் படி அமையாத விண்ணப்பங்கள் மற்றும் பூரணமற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.
iii. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது என்பதுடன், தாமதமாகி கிடைக்கும் விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
iv. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படும் தகைமைகள் உள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளார்கள் எனும் முன் தீர்மானத்தின் அடிப்படையில் சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகள் போட்டிப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன், அது பற்றி விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அறியத் தரப்படும்.
v. ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை, எழுத்துப் பரீட்சை மற்றும் தொழில்சார் செயல்முறைப் பரீட்சை என இரண்டு பகுதிகளைக் கொண்டதாகும்.

vi. முதலில் எழுத்துப் பரீட்சை நடாத்தப்படுவதுடன், அதில் சித்தியடையும் விண்ணப்பதாரிகளில் இருந்து அவர்கள் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் திறமை ஒழுங்கின் அடிப்படையில் ஆட்சேர்க்க உத்தேசிக்கும் எண்ணிக்கையினைப் போன்ற இரண்டு மடங்கினர் தொழில்சார் செயல்முறை பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். தொழில்சார் செயல்முறை பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் எழுத்துப் பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் கூட்டுத்தொகையின் திறமை ஒழுங்கு அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். அவர்களுள் தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படுவதுடன், அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படும் வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் உள்ள வெற்றிடங்களில் நியமிக்கப்பட உள்ளார்கள்.

vii. பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் எனும் மொழி மூலங்களில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் விரும்பும் ஒரு மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்ற முடிவதுடன், விண்ணப்பிக்கின்ற மொழிமூலத்தினை மாற்றுவதற்கு பின்னர் இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சார்த்திகள் இப் பரீட்சையின் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் ஒரு மொழியில் மட்டுமே பதில் அளித்தல் வேண்டும்.

**கவனத்திற் கொள்ளவும்:-**

அ). விண்ணப்பத்தின் அனைத்து பிரிவுகளும் பூரணப்படுத்தப்பட்டுள்ளதாக மற்றும் அத் தகவல்கள் சரியானவை என்பது தொடர்பில் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

ஆ). விண்ணப்பத்துடன் ஏதேனும் ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்படும் சந்தர்ப்பங்களில் குறித்த ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் பற்றி கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. அவ்வாறின்றி விண்ணப்பத்துடன் எவ்விதத்திலும் தொடர்புபடாத ஆவணம் அல்லது அதன் பிரதியினை இணைத்தல் கூடாது.

இ). விண்ணப்பமொன்று அல்லது அது தொடர்பிலானதோர் கடிதம் தபாலில் காணாமற் போனதாக அல்லது தாமதமானதென மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதி வரையில் விண்ணப்பங்களை தாமதப்படுத்துவதன் மூலம் ஏற்படக் கூடிய இழப்புக்களை விண்ணப்பதாரிகளே தாங்குதல் வேண்டும்.

ஈ). நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படும் எண்ணிக்கை, பதவிகளுக்காக நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் செயற்படும் திகதி என்பன நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். வெற்றிடங்களின் ஏதேனுமோர் எண்ணிக்கையினை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பாதிருக்கும் அதிகாரம் நியமன அதிகாரிக்கு உண்டு.

உ). இப் பதவிக்கு ஆட்சேர்ப்பது தொடர்பில் இந்த வர்த்தமானி அறிவித்தலில் உள்வாங்கப்படும் அல்லது உள்வாங்கப்படாத ஏதேனுமோர் விடயம் தொடர்பில் சிக்கலானதோர் நிலை ஏற்படுமாயின் அது பற்றிய சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானம் ஆகும். அவ்வாறே, சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலங்களில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலில் மொழி வாசகங்களிடையே ஏதேனுமோர் முரண்பாடு அல்லது பொருந்தாமை அல்லது வேறுபாடுகள் உள்ளமை காணக் கிடைப்பின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியிலான அறிவித்தலின் படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்ஹ,
செயலாளர்,
சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு.

Dr. Anil Jasinghe
Secretary
Ministry of Health & Mass Media
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

2026 ..08..... மாதம் ..24.. ஆம் திகதி,
சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு
"சுவசிரிபாய"
இலக்கம் 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10.

சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர் தொழிநுட்ப பிரிவு – 03 ஆம் சேவை வகையின் மின் மருத்துவ தொழிநுட்பவியலாளர் பதவியின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2026

பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம்: ☐ வதிவிட மாவட்டம்: ☐
(சிங்களம்-S, தமிழ்-T, ஆங்கிலம்-E)
*(குறித்த ஆங்கில எழுத்தினை கூண்டினுள் எழுதவும்)*

01.

(i) முதலெழுத்துக்களுடன் பெயர்:- ..................................................................................................
(சிங்களத்தில் / தமிழில்)

(ii) முழுப் பெயர்:- ........................................................................................................................
(சிங்களத்தில் / தமிழில்)

(iii) முதலெழுத்துக்களுடன் பெயர்:- Mr./Mrs./Miss ..........................................................................
(ஆங்கில் பேரெழுத்துக்களில்) உதாரணம்:- Mr./~~Mrs./Miss.~~ SILVA A.B.

(iv) முழுப் பெயர்:- ........................................................................................................................
(ஆங்கில் பேரெழுத்துக்களில்)

02. வதிவிட முகவரி

I. நிரந்தர வதிவிட முகவரி:- ..................................................................................................
(ஆங்கில பேரெழுத்துக்களில்)

II. நிரந்தர வதிவிட முகவரி:- ..................................................................................................
(சிங்களத்தில் / தமிழில்)

03. பிறந்த திகதி:-

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வருடம் | | | | | மாதம் | | | திகதி | | |

3.1 விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியில் வயது:-

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருடங்கள் | | | மாதங்கள் | | | நாட்கள் | | |

04. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-..........................................................................................

05 தொலைபேசி இலக்கம்: தனிப்பட்ட (கையடக்க):-............................ வட்ஸ்அப் :- .................

06 மின்னஞ்சல் முகவரி :- ..................................................................................................................

07 பால் :- ஆண் ☐ பெண் ☐

08 இலங்கைப் பிரசையா என்பது பற்றி:- ஆம் ☐ இல்லை ☐

09 விவாகமானவரா/ விவாகமாகாதவரா:-...........................................................................

10. கல்வித் தகைமைகள்:-

(அ) கல்வி பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர) பரீட்சை:

வருடம்:-.................... சுட்டெண்:-.......................

| தொ/இ | பாடம் | சித்தி |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |
| 03 | | |
| 04 | | |
| 05 | | |
| 06 | | |
| 07 | | |
| 08 | | |
| 09 | | |
| 10 | | |

(ஆ) தொழில்சார் மற்றும் தொழிநுட்பத் தகைமைகள் பற்றிய விபரங்கள்

| சான்றிதழ் | வழங்கிய நிறுவனம் | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(தொழில்சார் மற்றும் தொழிநுட்பத் தகைமைகளுக்குரிய சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைக்கவும்.)

(இ) வேறு விசேட தகைமைகள் மற்றும் அனுபவம்:

..........................................................................................................................................

..........................................................................................................................................

11. சேவை வரலாறு

i. இதற்கு முன் அரச சேவையில் பதவியொன்றினை வகித்துள்ளீர்களா:-......................

ii. ஆம் எனில் குறித்த பதவி:- ...................................................

iii. சேவை நிலையம்:- ...................................................

iv. நியமனத் திகதி:- ...................................................

v. விலகிய திகதி:- ...................................................

vi. விலகியமைக்கான காரணம்:- ...................................................

12. தாங்கள் ஏதேனும் குற்றவியல் குற்றத்திற்காக என்றாவது ஒரு நாள் நீதிமன்றத்தில் குற்றவாளி ஆக்கப்பட்டுள்ளீர்களா? ...................................

(ஆம் எனில் விபரங்களை வழங்கவும்):-

..........................................................................................................................................

..........................................................................................................................................

13. பரீட்சைக் கட்டணம் செழுத்திய பற்றுச்சீட்டு பற்றிய விபரங்கள்:-

I. பரீட்சைக் கட்டணம் செழுத்திய வங்கிக் கிளை:-..............................................................

II. செழுத்திய தொகை :-.......................................................................................

| |
|---|
| இலங்கை வங்கிக் கிளையொன்றுக்கு ரூ. 1,000.00 எனும் தொகையினைச் செழுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினை கழறாத வண்ணம் இங்கு ஒட்டவும் (விண்ணப்பத்தின் மற்றும் பற்றுச்சீட்டின் பிரதியொன்றினை தம்மிடம் வைத்திருத்தல் பின்பு பிரயோசனப்பட முடியும்) |

14. விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்தல்:

இந்த விண்ணபத்தில் என்னால் குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மையான மற்றும் சரியான தகவல்கள் என கௌரவத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இதில் உள்ளடங்கியுள்ள ஏதேனுமோர் விபரம் பொய்யானது அல்லது போலியானது என கண்டு பிடிக்கப்பட்டால், அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டது தெரிவு செய்யப்பட முன்னராயின் அந்த விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும் எனவும், தெரிவு செய்யப்பட்டதன் பின்னராயின் எந்தவித நட்டஈடுமின்றி மற்றும் அதற்குரிய சட்டரீதியான நடவடிக்கைகளின் கீழ் நான் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதனையும் ஏற்றுக் கொள்கின்றேன்.

திகதி:-........................................ ..........................................................

விண்ணப்பதாரியின் ஒப்பம்

15. விண்ணப்பதாரியின் ஒப்பத்தினை உறுதிப்படுத்துதல்:

இந்த விண்ணபத்தினைச் சமர்ப்பிக்கின்ற திரு/திருமதி/செல்வி .................................................. என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் அறிவேன் எனவும், அவர் எனது முன்னிலையில் .......................... ஆந் திகதி அவரது ஒப்பத்தினை இட்டார் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

..........................................................................

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் ஒப்பம்

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின்,
முழுப் பெயர்:- ......................................................
பதவி :-......................................................
முகவரி :-......................................................
(பதவி முத்திரையினால் உறுதிப்படுத்தவும்)

16. தற்சமயம் அரச சேவையில், மாகாண அரச சேவையில் கடமை புரியும் வர்த்தமானி அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள அடிப்படை தகைமைகளை பூரணப்படுத்தியுள்ள உத்தியோகத்தர்களுக்கு மட்டும் கீழ்வரும் விடயங்கள் ஏற்புடையனவாகும்.

a. திணைக்கள / நிறுவனத் தலைவரால் பூரணப்படுத்தப்பட வேண்டிய விபரங்கள்

i. உத்தியோகத்தரின் பெயர் :- ..............................................................................
ii. நிரந்தர சேவை நிலையம் மற்றும் முகவரி :-...............................................................
iii. நிரந்தர சேவை நிலையத்தின் தொலைபேசி இலக்கம்:- ...............................................
iv. உத்தியோகத்தரின் தேசிய அடையாள அட்டை இலக்கம்:- ............................................
v. பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது வகிக்கும் பதவி:- ..................................................
vi. அப் பதவியில் நியமனம் பெற்ற திகதி :- ....................................................................
vii. அப் பதவியில் நிரந்தரப்படுத்தப்பட்டுள்ளதா? ("ஆம்" எனில் நிரந்தரப்படுத்தப்பட்ட திகதியினைக் குறிப்பிடவும்) ..........................................................................................
viii. சேவைக் காலத்தினுள் ஒழுக்காற்று ரீதியிலான தண்டனைகளை பெற்றுள்ளாரா? ("ஆம்" எனில் அது பற்றிய விபரங்களை உள்ளடக்கவும்) ................................................................ ..........................................................................................................................
ix. தற்சமயமாகுகையில் ஒழுக்காற்று ரீதியிலான தண்டனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளாரா? ("ஆம்" எனில் அது பற்றிய விபரங்களை உள்ளடக்கவும்) .................................................. ..........................................................................................................
x. தற்சமயம் ஒழுக்காற்று விசாரணைகள் இடம்பெறுகின்றனவா? ("ஆம்" எனில் அது பற்றிய விபரங்களை உள்ளடக்கவும்) ........................................................................................

இந்த விண்ணப்பதாரியான திரு/திருமதி/செல்வி ........................................ இந்த நிறுவனத்தில் .......................... ஆம் திகதி முதல் ............................ (பதவியினை குறிப்பிடவும்) ஆக சேவை புரிகின்றார். அவர் நிரந்தர, ஓய்வூதியம் கொண்ட பதவியொன்றினை வகிக்கின்றார். மேலே 16 ஆம் விடயத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்தும் இந்த அலுவலகத்தில் உள்ள அறிக்கைகளின் படி பரிசோதித்து பார்க்கப்பட்டன எனவும், அவை சரியானவை எனவும், அவர் இப் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் / முடியாது எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

..........................................................................................

**திணைக்களத் தலைவரின் / நிறுவனத் தலைவரின் ஒப்பம்**

பெயர் :- ........................................................................
பதவிப் பெயர் :- ........................................................
திகதி :- .........................................................................
திணைக்களம் / நிறுவனம் :- ...................................
(பதவி முத்திரையினால் உறுதிப்படுத்தவும்)